Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசுஹு வைகாசி-ஆனிமீ 1965 ஜூன்	பகுதி 3

பத்திரிகாசிரியர் குழுவின் அங்கத்தினர்

1. திருவாளர் A. K. ஸீதாராமன், B.A., L.T., (ஆசிரியர்)
2. ,, T. S. ராஜகோபாலன், B.A., L.T., (வெளியிடுவோர்)
3. ,, L. மரியப்பிரகாசம், B.A., L.T., J.P.
4. ,, C. ரங்கநாதஅய்யங்கார், M.A., L.T., (பத்திரிகைக் காரியதரிசி
5. ,, P. V. ராமஸ்வாமி, B.A., L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி
6. ,, V. பூவராகமூர்த்திராவ், B.A., L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி
7. ,, V. S. சரவணன்
8. ,, P. ராமச்சந்திரன்
9. ,, G. ஸ்ரீனிவாசாச்சாரி
10. ,, M. P. சுப்பிரமணியம்
11. ,, M. S. அருள்சாமி

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 ந. பை.

பொருளடக்கம்

1. 55-வது இராச்சியக் கல்வி மகாநாடு (காரைக்குடி) 41
2. தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு கூட்டம் 1965 ... 44
3. அவசரச் செய்திகள் அனுப்ப புதுமையான "ஒளிப்பெட்டி" ... 45
4. டாக்டர் ஜே. வி. நலிவிக்கர் ... 48
5. எஃகோ (ECHO) ... 51

Printed by S. Venkataraman, at The Hind Press Private Ltd
113, R. K. Math Road, Madras- 28. Published by
Sri T. S. Rajagopalan, B.A., L.T., for the S. I. T. U. at Raja
Annamalaipuram, Madras- 28.
Editor; Sri A. K. Sitharaman, B. A., L.T.,

பாலர் கல்வி

தொகுதி 30	விசுவாவசுஞு வைகாசி-ஆனிமீ 1965 ஜூன்	பகுதி 3

55-ஆவது இராச்சியக் கல்வி மகாநாடு
காரைக்குடி
(இராமநாதபுரம் மாவட்டம்)

வரவேற்புக் குழுத் தலைவர் ஸ்ரீமான் C.V. C.TV. வெங்கடாசலம் செட்டியார் அளித்த வரவேற்புரை.

"இந்த மகாநாட்டிற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் நான் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். இந்தியாவின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவரும், ஆழ்ந்த கல்விமானுமான காலஞ்சென்ற Dr. Rm. அழகப்பச் செட்டியார் நிறுவிய இந்த கல்விக் கூடத்திற்கு நீங்கள்வருகை தந்திருப்பதைக் குறித்து நான் மிகுந்த சந்தோஷம் அடைந்துள்ளேன். எவ்விதம் இந்துக்களுக்குக் காசி ஒரு புனிதயாத்ரீக ஸ்தலமோ, அதே போல் அழகப்பா கல்விக்கூடம் கல்விமான்களுக்கு ஒரு முக்கிய கேந்திரம் என்று பெருமையுடன் கூறுகிறேன்.

"நாட்டுக் கோட்டைச் செட்டியார் மரபைச் சேர்ந்த நான் நேராக விஷயத்தில் ஈடுபட விரும்புகிறேன். என் மனத்திலுள்ள சில விஷயங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். மாநில அரசாங்கம் 11-ஆம் வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்க முன் வந்துள்ளது. இந்தச் சலுகை கல்லூரிகளுக்குக் கூட (விஞ்ஞானம், ஆசிரியர் பயிற்சி-பொறியியல் போன்ற எத்துறையாயினும்) விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். வருடச் செலவில் துண்டு விழும் செலவை ஈடு செய்ய அரசாங்கம் முன்வருமேயானால், பலவிதமான கல்லூரிகளை நிறுவ பல ஸ்தாபனங்கள் முயற்சிக்கும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். இவ்விதக் கூட்டு முயற்சி நீண்டநாள் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

"ஆரம்ப, செகண்டரி, ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் உயர்த்தப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தில் 4-ஆவது கட்ட வேலையாளின் ஊதியத்தைவிட, குறைவான சம்பளமே மேலே குறிப்பிட்ட ஆசிரியர்கள் பெறுகிறார்கள். ஒரு B. T. பட்டதாரியின் ஆரம்பச் சம்பளம் ரூ. 140. அவன் பட்டம்பெறுமுன் 5 ஆண்டுகள் கல்லூரிப் படிப்புப் பெறுகிறான். பொறியியல் (B.E.) பட்டதாரி ஒருவன் ஆரம்பச் சம்பளம் ரூ. 275. அவன் கல்லூரிப் படிப்பு 6 ஆண்டுகள். ஒருவருஷ அதிகப் படிப்பிற்கு சம்பள வித்தியாசம் ரூ. 135 இது சரியல்ல. அரசாங்கம் இதை உடனே கவனிக்க வேண்டும்.

"ஆசிரியர்களும் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டு என்று நான் கூறத் தயங்கவில்லை. சமூக முன்னேற்றத்தில் ஏற்படும் மாறுதல்களால் ஆசிரியர்களின் பொறுப்பும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. தாயின் உதிரத்தில் வளரும் சிசு, நற்குணமுள்ளதாகத் தோன்றவேண்டுமென்ற ஆவாவுடன் சூல்கொண்ட தாய்மார்கள் நமது புராண, இதிகாசங்களிலுள்ள கதைகளைக் கேட்பது வழக்கம். நம்பிக்கையுள்ள ஆசிரியர்கள், தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளை இந்த முறையில் பயில்விக்கலாம்.

"வருங்காலத்தில் கல்லூரிகள் முனிசிபாலிடி உள்ள இடங்களிலேயே நிறுவப்பட வேண்டுமென நான் கருதுகிறேன். கட்டிடங்களிலும், மற்ற தேவைகளிலும் பணத்தை முடக்குவது நல்லதல்ல. இருக்கும் கல்லூரிகளிலேயே ஷிஃப்ட் முறையைக் கையாண்டால் அதிக மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பு கிட்டும்.

* * *

"தற்போது இந்திய நிர்வாகப் பணியாளராக (I. A. S) உள்ள பலர் ஆரம்பத்தில் திறமை வாய்ந்த கல்லூரி ஆசிரியர்களாக இருந்தவர்கள்தான் என உங்களுக்குத் தெரியும். கல்லூரிகளை விட்டு இந்திய நிர்வாகப் பணிக் குழுவுக்கு அவர்கள் சென்றதற்குக் காரணம், இரண்டு துறைகளிலும் உள்ள சம்பள விகிதமே எனவே கல்லூரிப் படிப்பு பயனுடையதாகச் செய்ய வேண்டுமானல் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி அவர்களைக் கல்லூரியிலேயே தங்கவைக்கவேண்டும்.

"சில காலத்துக்கு முன் நான் ஒரு குறிப்புத் தயாரித்து மாநில அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தேன். அதில் என் நீண்டகால அனுபவத்தின் விளைவாகத் தோன்றிய சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன். அவற்றுள் சிலவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளி ஆசிரியர்கள். கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரின் மாதாந்திர சம்பளத்தை அரசாங்கம், நேராகவே அவர்களுக்குப் பட்டுவாடா செய்யவேண்டுமென்பது என் குறிப்புக்களில் ஒன்று. மாணவர்கள் செலுத்தும் சம்பளம் நிர்வாகிகளால் சர்க்கார் கணக்கில் 'treasury'களில் கட்டப்படவேண்டும். இந்த முறை தனியார் துறைப்பள்ளிகளுக்கு ஏற்படும் சிரமத்தை வெகுவாகக் குறைக்கும் என்பது என் கருத்து.

"ஆசிரியர்களின் பணியை தேசீயமாக்க வேண்டும் (Provincialisation) என்று நான் விரும்புகிறேன். இதர அரசாங்க ஊழியர்களை ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றுவதுபோல் ஆசிரியர்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். வீட்டு வசதி கிடைக்காத பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கு வசிக்க வீட்டு வசதி செய்துதர வேண்டும். எந்த வகுப்பு ஆசிரியராயினும் அவருடைய மொத்த ஊதியத்தில் 25 சதவிகிதமாவது அவர் சேமித்துவைக்க வழிசெய்து தரவேண்டும். க்ஷேமநிதி, கட்டாயச் சேமிப்பு ஆயுள் இன்ஷியூரன்ஸ் போன்றவைகளின் வாயிலாக இந்தத் தொகை சேகரமாவதற்குத் தகுந்த திட்டம் வகுத்துக் கொடுக்கலாம்.

"இப்போது உள்ள புதுமுக வகுப்பும், 3 வருடப் பட்டப் படிப்பும் கல்வித்

திறனை வெகுவாகக் குறைத்துவிட்டன என்றே நான் கருதுகிறேன். முன்பு இருந்ததுபோல் 2 வருட இன்டர் மீடியேட்டும் 2 வருடப் பட்டப் படிப்புமே நம் நாட்டிற்கு உகந்தது. கல்வியாளர்கள் இதை நன்கு சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பூர்விக இந்தியாவில் ஆசிரியன், சமூகத்தின் தலைவனாக விளங்கினான். இன்றோ அதே சமூகம் அவனை வெறும் கூலியாள் என இகழ்ச்சிப் படுத்துகிறது. சமூக முன்னேற்றம் வேண்டுமானால் மக்கள் சரியான வழியில் கல்வி பயிலவேண்டும். ஆசிரியன் ஒரு சமுதாய ஊழியன். ஆகவே அவனுக்குரிய இடத்தைக் கொடுக்க வேண்டியது அவசியம். இவற்றையெல்லாம் அரசாங்கம் நன்கு உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

"ஆசிரியர்களுக்கும் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பழங்கால 'குரு'வைவிட தற்கால ஆசிரியனின் பொறுப்பு அதிகம். நமது பண்பாட்டின் தீபச் சுடராக அவன் திகழவேண்டும். வாழ்க்கையின் ஆன்மீக மதிப்பும், சுபிக்ஷமும் அணு சக்தியும் பெருகி வரும் இந்நாளில், இவற்றை அடையும் குறிக்கோள்களை வகுத்துக்கொடுக்க இயலாத ஆசிரியர்கள் தங்கள் கடமையினின்றும் தவறியவர்களே யாவர். ஆசிரியர்களைவிட ஆசிரியைகளே இதற்குத் தகுதியானவர்கள் என்பது என் கருத்து. உயர்நிலைப்பள்ளிப் படிப்பின் இறுதிக்கட்டம் வரையிலாவது குழந்தைகளுக்கு ஆசிரியையின் உதவி இருந்தால் இத்திட்டம் நல்ல பலனை அளிக்கும் என நம்புகிறேன்."

* * *

"இராமநாதபுரம் மாவட்ட கில்டு சார்பாகவும், இம்மகா நாட்டின் வரவேற்புக் குழுவின் சார்பாகவும், மற்ற ஆசிரியர்களின் சார்பாகவும் இம்மகா நாட்டை துவக்கிவைக்க இசைந்துள்ள திட்டக் கமிஷன் அங்கத்தினர் Dr. V. K. R. V. Rao அவர்களுக்கும் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஒத்துக்கொண்ட லேர்க்சபை அங்கத்தினரும் முன்னாள் சென்னை, பச்சையப்பன் கல்லூரி முதல்வரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் இரத்தினசாமி அவர்களுக்கும் என் நன்றி கலந்த வரவேற்பை அளிக்கிறேன்."

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம்-1965

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் மே மாதம் 4-ஆம் தேதி காலை 8 மணிக்கு காரைக்குடி Dr. அழகப்பா, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கட்டிடத்தில் சங்கத் தலைவர் உயர்திரு A. K. சீத்தாராமன் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. இறை வணக்கத்திற்குப் பின் செயலர் திரு. T. S. இராஜகோபாலன் சென்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சிகள் கொண்ட குறிப்பை வாசித்தார். அவ்வமயம் திரு G. கிருஷ்ணமூர்த்தி M L. C. அவர்கள் சில மாவட்டங்களில் இருந்து வந்துள்ள பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை என்று வாதித்தார் அந்த மாவட்டங்கள் சங்கத்திற்கு ஆண்டுச் சந்தாத் தொகை பாக்கி என்றும் அக்காரணத்தினுல் அப்பிரதிநிதிகளுக்குக் கூட்டத்தில் பங்குகொள்ள வாய்ப்புக் கிடையாதென்றும் கூறினுர். தலைவர் பதில் அளிக்கையில் எந்த மாவட்டமும் நடப்பு வருஷத்திற்குச் செலுத்தவேண்டிய பாக்கி இல்லை என்றும், கணக்கில் காட்டப்பட்டிருக்கும் பாக்கிகள் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே காட்டப்பட்டு வருகிறதென்றும் அவைகளைப் பரிசீலித்துதான் சுமுகமாகப் பைசல் செய்து வருவதாகவும் 'பாக்கி' என்ற தலைப்பு அடுத்த ஆண்டுக்குள் முற்றிலும் பைசல் செய்யப்பட்டு விடுமென்றும் கூறி, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படி கேட்டுக் கொண்டார். பின்னர் செயலர் ஆண்டு அறிக்கையையும் 1963-64, 1964-65 ஆண்டுகளுக்கான தணிக்கை செய்த செலவு அறிக்கைகளையும் சமர்ப்பித்தார். விவாதத்திற்குப் பின் ஆண்டு அறிக்கையும் வரவு செலவு அறிக்கைகளும் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்பு 1965-66க்குக் கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நான்கு உப தலைவர்களைத் தவிர மற்ற நிர்வாகிடிள் போட்டியின்றி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கடைசி நிகழ்ச்சியாக சங்க விதிகளின் திருத்தப் பிரேரணை எடுத்துக்கொள்ளப் பட்டது. தலைவர் அவர்கள் சங்க விதிகள் எல்லாமே மாற்றப்படவேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறி புதிய நிர்வாகக் கமிட்டி அதற்கு வேண்டிய முயற்சிகளை உடனே எடுத்துக்கொள்ளும் என்று உறுதி கூறியதின் மேல் திருத்தங்கள் கொண்டுவந்த அங்கத்தினர்கள் தங்கள் திருத்தங்களை வாபஸ் வாங்கிக் கொள்வதாகக் கூறினர். செயலரின் நன்றியறிதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

நிர்வாகிகள்

தலைவர் : உயர்திரு A. K. Sitharaman (Madras)

உபதலைவர்கள் : (1) உயர்திரு V. Ant^niswami (Tuticorin)
(2) ,, ,, R. Gnanamuthu (Madurai)
(3) ,, ,, R. Rajamanickam (Thanjavur)
(4) ,, ,, V. Perumal (South Arcot)

பொதுச் செயலர் : உயர்திரு L. Mariapragasam (Madras)

உதவிச் செயலர்கள் : (1) உயர்திரு Frank Duraiswami (Madras)
(2) M. S. Arulswami (Ramnad)

பொருளர் : உயர்திரு V. Saravanan (Madras)

விழிப்புக்கு (Vigilance Commitee:) மு. தலைவர் உயர்திரு Meenakshisundaram (Madras)

அவசரச் செய்திகள் அனுப்ப புதுமையான "ஒளிப்பெட்டி"

டச்சு நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வெளியே சென்றிருக்கும் டாக்டருக்கு அவசரமாகச் செய்தி அனுப்பவும், விற்பனையாளர்களுக்கு அவசர உத்தரவுகள் பிறப்பிக்கவும் வானொலி போன்ற புதுமையான கருவி ஒன்று, ஹாலந்து நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. "செமபோன்" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த "வான் ஒலிப்பெட்டி"யில் எரியும் விளக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு, தகவலை அறிந்து கொள்ள முடியும்.

மருந்துகள், மருத்துவக் கருவிகள் அடங்கிய பெட்டியுடன், வானொலி போன்ற கைப்பெட்டி ஒன்றையும் குடும்ப டாக்டர் தன்னுடன் எடுத்துச் செல்கிறார். நோயாளியைப் பரிசோதனை செய்துப் பார்க்குமுன்னர், டாக்டர், கைப்பெட்டியிலிருந்து "ஏரியலை" உயர்த்திவிட்டு, ஒரு கைப்பிடியை திருகுகிறார். இதன்பின் டாக்டர் நிம்மதியாக நோயாளியைக் கவனிக்கத் தொடங்குகிறார். சிறிது நேரத்தில் கைப்பெட்டியிலிருந்து ஒருவித 'விசில்' சத்தம் வெளிப்படுகிறது. அங்கிருக்கும் ஒரு சிறு விளக்கு அல்லது இருவிளக்குகள் எரியதொடங்குகின்றன. டாக்டர், தான் உடனடியாகப் புறப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்கிறார். ஏனெனில் ஒரு பெண், பிரசவ வேதனைப் படுகிறார் என்பதை அந்த விளக்குகள் தெரிவிக்கின்றன.

டாக்டர் வைத்திருந்தது சாதாரண வானொலிப் பெட்டி அல்ல; டாக்டர் மட்டுமல்ல, வணிகப் பிரதிநிதிகள், பெரிய கட்டுமான திட்டங்களில் வேலை செய்யும் ஓவர்சீயர்கள், கால்நடை மருத்துவர்கள், லாரி டிரைவர்கள் போன்றவர்களும், இந்தப் புதுமையான "வானொலிப் பெட்டியை"ப் பயன்படுத்துகிறார்கள். டச்சு தபால், தந்தி இலாகாவினர், "செமபோன்" என்ற இந்த விந்தையான கருவியைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இப்புதிய செய்திப் போக்குவரத்துச் சாதனம், 1964 செப்டம்பரில் நடைமுறைக்கு வந்தது. அதே மாதத்தில் ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய இரு நாடுகளிலும் இச்சாதனம் செயலாவதற்கு வசதியாக ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

ஐரோப்பாவில், ஜனநெருக்கடி மிக்க நாடு ஹாலந்து. சில சமயங்களில் சிலருடன் தொடர்பு கொள்வது என்பது மிகவும் கஷ்டமாகிவிடுகிறது. டெலிபோன் இல்லாத ஒரு நோயாளியின் வீட்டுக்குச் செல்லும் டாக்டர், காரில் நெடுந்தூரப் பயணம் செய்யும் வணிகப் பிரதிநிதி ஆகியோருடன் உடனடியாகத் தொடர்பு கொள்வது என்பது இயலாத காரியம். எவ்வித தாமதமும் இன்றி, உடனடியாகத் தகவல் கொடுக்கப்படுமானால் இவர்களுக்கு பெரிதும் நன்மையல்லவா? சரக்கு கொண்டு செல்லும் லாரி டிரைவர்களுக்கு, நடுவழியில் அவசியமான முக்கிய தகவல் கொடுக்கப்பட்டால், அதனால் பணமும் காலமும் மிச்சமாகும்.

டெலிபோன் மூலம் தொடர்பு

"செமபோன்" மூலமாக இப்போது இது சாத்தியமாகிறது. இது ஒரு குறிப்பிட்ட நம்பரை 'டயல்' செய்வதின் மூலம், தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும்; இதில் கடைசி எண் தான், செய்தியாகும்.

இம்முறையின் அடித்தளம், 80 'மெகசைக்கிள்' வானொலி ஒலிபரப்புக் கருவிகளாகும். தற்போது டச்சு நாட்டில் இவ்வித மூன்று ஒலிபரப்புக் கருவிகள் இருக்கின்றன.

'செமபோன்' கருவி வைத்துள்ள ஒரு டாக்டரைத் தொடர்பு கொள்ள விரும்பி டெலிபோனை 'டயல்' செய்தால், அந்த சமிக்ஞைகள், டெலிபோன் கம்பி மூலமாகச் சென்று ஒலிபரப்பு நிலையத்தை அடைந்து அங்கிருந்து ஒலிபரப்பாகி, டாக்டரின் 'செமபோன்' கருவியை அடைகிறது. ஒருவர், தனது தொலைபேசியில் எண்களைச் சுழற்றியவுடன் முதலில் 'செமபோன்' எக்ஸ்சேஞ்சுடன் தொடர்பு ஏற்படுகிறது! டயல் செய்யப்படும் எண் தொடரின் கடைசி எண், ஒன்றிலிருந்து ஆறுக்குள் ஏதாவது ஒன்றாக இருக்கும். செமபோனில் மூன்று சிறிய விளக்குகள் இருக்கும். அவற்றிற்கு 1, 2, 4 என்று எண் கொடுக்கப்பட்டிருக்கிறது. அழைத்தவர் சுழற்றிய கடைசி எண் 6 என்றால், செமபோனில் 2, 4 எண்கள் தரப்பட்டுள்ள விளக்குகள் எரியும்; 5-ஐ சுழற்றியிருந்தால், 1, 4 எண் விளக்குகள் எரியும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், அழைப்பவரும், அழைக்கப்படுகிறவரும், முன் கூட்டியே தங்களுக்குள் ஒவ்வொரு எண்ணுக்குமுள்ள செய்தி என்ன என்பதை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக ஒரு டாக்டரின் வீட்டுக்கு அவசரச் செய்தி வருகிறது. ஆனால் அவர், வேறு நோயாளியைப் பார்க்கப் போயிருக்கிறார். டாக்டரின் இல்லத்தினர், டெலிபோனில் கடைசி எண்ணாக 1-ஐ வைத்து எண்களை சுழற்றினால், டாக்டரின் செமபோன் கருவியில் 1-ஆவது எண் விளக்கு எரியும், உடனே டாக்டர் அதைப் புரிந்து கொண்டு, டெலிபோன் மூலம் வீட்டுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு செய்தியைக் கேட்டறிகிறார்.

'செமபோன்' திட்டத்தில் சேர்ந்திருப்பவர்கள், தங்களுக்குள் கலந்து பேசி, ஒவ்வொரு எண், குறிப்பிட்ட செய்தியாகும் என்பதை நிர்ணயித்துக்கொள்ளலாம். உதாரணமாக, ஒரு கம்பெனியின் டைரக்டர் 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு நகரில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள புறப்பட்டுப் போகிறார். ஆனால் அவர் கிளம்பிய பின்னர், அந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டதாக அலுவலகத்திற்குத் தகவல் வருகிறது. கம்பெனி டைரக்டருக்கு உடனடியாக தகவல் கொடுக்காவிடில், பயணமும் பணமும், காலமும் வீணே. டைரக்டரின் காரில் பொருத்தப்பட்டிருக்கும் 'செமபோன்' மூலம் தகவல் கொடுக்கப்படுகிறது; குறிப்பிட்ட எண்ணின் பொருளைப் புரிந்துக் கொண்டு அவரும் அலுவலகத்திற்குத் திரும்பி விடுகிறார். கூட்டம் ரத்து செய்யப்படுமானால் குறிப்பிட்ட எண் செய்தியை தெரிவிக்குமாறு தமது காரியதரிசிக்கு டைரக்டர் உத்தரவிட்டுச் செல்வது எவ்வளவு நல்லதாகிவிட்டது.

எந்த இடத்திலும் இயங்கும்

எந்த இடத்திலும் இயங்கும்படியாக 'செமபோன்' தயாரிக்கப்பட்டிருக்கிறது. பாட்டரியில் இது இயங்குகிறது. கார் பாட்டரியிலும் பொருத்திப் பயன்படுத்தலாம். 'செமபோன்' சீரான நிலையில் இயங்குகிறதா என்பதைக் கண்டுபிடிப்பது எப்படி? இதற்காக தனியாக நான்காவது விளக்கு இருக்கிறது. செமபோனை இயக்கியதும், இந்த விளக்கு எரியாது. இது எரிந்தால், 'செமபோன்' பெட்டிக்கு ஒலி அலைகள் வந்து சேரவில்லை என்று அர்த்தம் பெட்டியை வந்தடைகிற 'சமிக்ஞைகள்' அப்படியே இருக்கும். ஒரு பொத்தானை அழுத்தினால்தான், இது மறையும். அத்துடன் 15 விநாடி இடைவெளிக்கு ஒரு முறை செய்தி எண் திரும்ப திரும்ப ஒலிபரப்பப்படுகிறது. கணவாய் வழியாக மோட்டார் சென்று கொண்டிருந்தால், செய்தி வந்து சேராமல் போய்விடும்; மீண்டும் ஒலி பரப்பினால், கணவாயை விட்டு வெளியே வந்ததும், மோட்டாரிலுள்ள 'செமபோன்' பெட்டியை செய்தி எட்டிவிடும்.

'செமபோன்' முறையை சில ஆண்டுகளாக நன்கு சோதனை செய்தபின்னரே டச்சு தபால், தந்தி இலாகாவினர் இதை அமுலுக்கு கொண்டுவந்தனர்.

பழுது பார்ப்பதற்காக மின்சார ஒட்டம் நிறுத்தப்பட்ட கம்பிகளில் வேலை செய்யும் மின்சார ஊழியர்களுக்கு முன்கூட்டியே "மின்சார தொடர்பு ஏற்பட இன்னும் எத்தனை நிமிடங்கள் இருக்கின்றன" என்று தகவல் அனுப்ப 'செமபோன்' பயன்படுகிறது. முன்பெல்லாம், மீண்டும் மின்சார தொடர்பு ஏற்படுதததுவதற்கு முன்னர், பல மைல் தூரம் சென்று, ஊழியர்களிடம் நேரடியாகக் கூறவேண்டியிருந்தது.

'செமபோன்' கருவியை தயாரித்தவர்கள், பிலிப்ஸ் கம்பெனியார். டச்சு தபால், தந்தி இலாகாவின் ஒத்துழைப்புடன் இதை பிரபலப்படுத்தி வருகின்றனர். இத்திட்டத்தில் சேர ஏராளமான மக்கள் முன்வந்துள்ளனர். ஆனால் 'செமபோன்'. உற்பத்தி இன்னும் தொடக்கக் கட்டத்தில் இருப்பதால், அனைவரையும் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

ஐரோப்பா பூராவுக்கும் 'செமபோன் முறையை விஸ்தரிப்பது சாத்தியமே. இதற்கு 288 டிரான்ஸ்மிட்டர்கள் தேவை. அப்படி நடக்குமானால், மாட்ரிட் நகருக்குச் சென்ற ஹெல்சிங்கி வணிகருக்கு, அவர் தந்தையான செய்தியையும், பிறந்த குழந்தை ஆணா பெண்ணா என்பதையும் சில நிமிடங்களில் தெரிவிக்கலாம்.

(தி நெதர்லண்ட்ஸ்)

டாக்டர் ஜே. வி. நார்லிக்கர்

இருபத்தாறு வயதே நிரம்பிய இந்திய க் கணித விஞ்ஞான மேதை நார்லிக்கர் ஐன்ஸ்டைனின் கொள்கையை மிஞ்சிய கோட்பாடு ஒன்றை நிறுவி உலகப்புகழ் பெற்றுள்ளார். அவர் சென்ற மாத இறுதியில் சென்னைக்கு வந்து கணித விஞ்ஞான வல்லுநருக்கும் பொது அறிவு விழையும் பெருந்திரள் மக்கட்கும் செவிச் சுவை விருந்து அளித்தார். பெப்ரவரி 24-ஆம் தேதி இந்தியக் கணித விஞ்ஞானச் சங்கத்தில் சில கணித விஞ்ஞானத் துறை நிபுணருக்கு மட்டுமே அழைப்பு விடுத்திருந்த கூட்டத்திற்கு ஆயிரத்து ஐந்நூற்றிற்கு மேற்பட்ட மக்கள் திரண்டு வந்திருந்தனர். டாக்டர் நார்லிக்கரும், கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்த டாக்டர் அலாடி ராமகிருஷ்ணனும் மனமுவந்து செயல்நிரலை மாற்றி, தாம் பெற்ற கணித இன்பத்தை 'இவ் வையதமும்' பெறவேண்டி அக்கூட்டத்தை நேரு கேள்விக்கூடத்தில் (Auditorium) நடத்தினர். இசைக் கச்சேரிக்குத் திரண்டு வருவது போலக் கணிதக்கடலின் அமிர்தத்தைப் பருக மக்கள் வந்துள்ளதைக் கண்டது தம் வாழ்நாளிலே ஒரு பொன்னுளாகும் என்று டாக்டர் அலாடி ராமகிருஷ்ணன் தமது வரவேற்புரையில் கூறினார். இத் துறையில் ஆர்வத்தைப் பரப்பத் தாம் பல ஆண்டுகளாக முயன்று வருவதாகவும், டாக்டர் சந்திரசேகர், பேராசிரியர் அபயங்க்கர் முதலியோர் சொற்பொழிவில் காணுத பெரும் கூட்டத்தை இன்று திரட்டியது நார்லிக்கரின் பெயர் வன்மையோ அல்லது ஈர்ப்புத்தத்துவத்தில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கவர்ச்சியோ என்று அவர் வியந்தார். கல்வி கற்பிப்போர் புதிய கருத்துக்களுக்கும், கண்டுபிடிப்புக்களுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டுமென்றும், உண்மையாகவே உயர்ந்த கருத்து ஒன்று தோன்றினல் அது உலகில் பரவியே தீரும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

ஜயந்த் விஷ்ணு நார்லிக்கர் மகாராஷ்டிரத்திலுள்ள கோல்ஹாப்பூரில் 1933-ம் ஆண்டு ஜூலை 19-இல் பிறந்தார். அவருடைய தந்தை வி. வி. நார்லிக்கர் காசிப் பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். 'விளையும் பயிர் முளையில். தெரியும்' என்பதற்கேற்ப நார்லிக்கர் சிறு வயதிலேயே கணிதநாட்டம் கொண்டார். தந்தையும் கணிதத்தில் பொழுது போக்குவதற்குரிய கரும்பலகை ஒன்றை அவருக்கு விளையாட்டுப் பொருளாகக் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. இளம் நார்லிக்கர் காசிப்பல்கலைக் கழகதில் பி.எஸ். ஸி. பட்டம் பெற்றுப் பின் கேம்பிரிட்ஜுக்குச் சென்றுர். 1960-இல் ட்ரைப்போஸ் (Dripos) என்னும் பரிசை வழங்கப் பெற்றுர். 1963-இல் அப்பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுர், படிக்கும் காலம் முழுவதிலும் அவர் பெற்ற பரிசுகளும், சிறப்புக்களும் மிகப் பல. 1963-இல் ராயல் வானியல் சங்க உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார் அதே ஆண்டு பிப்ரவரி மாதம் ஹாய்ல் பேராசிரியரிடம் (Professor Hoyle) ஆராய்ச்சித் துணைவராக அமர்ந்தார். பல பன்னாட்டுக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆராய்ச்சி உரைகள் நிகழ்த்தியுள்ளார். 1964 ஜூன் 11-இல் அவரும், பேராசிரியர் ஹாய்லும் சேர்ந்து இயற்றிய 'ஈர்ப்பின் புதிய நோக்கு'

(A New Look at Graivitation) என்னும் ஆராய்ச்சி உரையை விஞ்ஞான உலகு வரவேற்று நார்லிக்கருக்கு இவ்வுலகின் தலைப்புலவர் வரிசையில் இடமளித்தது.

சென்னைப் பொதுச் சொற்பொழிவில் நார்லிக்கர் இயற்கையில் அறிஞர் கண்ட நான்கு முக்கியமான சக்திகளை—ஈர்ப்பு (gravitation) மின்காந்தச் (electro-magnetic) சக்தி, வன் (strong) சக்தி, மென் (weak) சக்தி, ஆகியவற்றை – முதலில் குறிப்பிட்டார். இவற்றுள் ஈர்ப்பு விதிகளை நியூட்டன் முதலில் கண்டுபிடித்து வகுத்தார். இதற்குப் பின் தோன்றியனவே மின்-காந்தச் சக்தியை விளக்கும் மாக்ஸ் வெல்லின சமன்பாடுகள் (Maxwell's Equation).

மேற்கூறிய சக்திகளுள் மிகவும் வலுக் குறைந்தது ஈர்ப்புச்சக்தி இது முதலில் கண்டுபிடிக்கப்பட்டது வியக்கத்தக்கது. ஈர்ப்புச் சக்தி மின்காந்தச் சக்தியைவிட மிகவும் வன்மை குறைந்தது. இது எதிர் ஈரடுக்கு விதிக்கு (inverse square law) உட்பட்டது. புவிமையத்திலிருந்து அப்பால் செல்லச் செல்ல ஒரு கடியாரம் ஓடும் வேகம் குறைகிறது தேர்வு எழுதும் மாணவர் மேல்மாடியில் இருந்து எழுதினால் அவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கும் என்று நார்லிக்கர் வேடிக்கையாகக் கூறினர். இந்த வேற்றுமையைச் சாதாரணக் கடியாரங்கள் காட்டாவிட்டாலும் நுட்பமான அணுக்கடியாரங்கள் காட்டுகின்றன.

புவி ஈர்ப்புச்சக்தி மட்டுமே ஒரு கோளத்திற்கு உண்டானால் அதன் துணுக்குகள் அனைத்தும் விரைவில் மையத்தை நோக்கி வரையிலிப்பொருள் திணிவுள்ள (infinite mass) சிறு பிண்டமாகத் திரண்டுவிடும். சூரியனிலும், நட்சத்திரங்களிலுமுள்ள அணுமையச் சக்தி இவ்வாறு சுருங்குவதைத் தடைப்படுத்துவதுடன் வெப்பத்தையும் அளிக்கிறது. ஒவ்வொரு நட்சத்திரமும் இச் சக்திகளின் நுட்பமான சமநிலையால் கட்டுண்டு நிற்கிறது.

இச்சக்திகளின் தன்மையை ஒரு சிந்தனைப் புறஆய்வின் மூலம் (thought experiment) நார்லிக்கர் விளக்கினர். 8000° செ. வெப்பநிலையுள்ள A என்ற ஒரு நட்சத்திரத்தை 4000° செ. வெப்ப நிலையுள்ள B என்ற மற்றொரு நட்சத்திரத்துடன் இணைப்பாக நினைத்துக் கொள்வோம். வெப்பம் A-இலிருந்து B-க்குச் செல்கிறது. உடனே இரண்டின் சமநிலையும் குலைகிறது. A-ல் வெப்பம் குறைந்து விடுவதால் அணுமைய வினை அதிகரிக்கிறது. இதன் வினைவு ஈர்ப்பின் வினைவைவிட அதிகமாகையால் அதன் உஷ்ணநிலை அதிகரிக்கிறது. இதற்கு மாறாக B-இல் வெப்ப நிலை முதலில் அதிகரித்து அணுமையச் செயல் குறைந்ததால் வெப்பம் குறைகிறது. ஆகவே இரு நட்சத்திரங்களை ஒரு வெப்பக் கடத்தியைக் கொண்டு இணைத்தால் அதிக வெப்பமுள்ளது இன்னும் உஷ்ணமடைகிறது. குறைந்த வெப்பமுள்ளது குளிர்கிறது!

ஈர்ப்புச்சக்தி ஓர் எதிர்மறைச் சக்தித் தேக்கம் (reservoir of negative energy) ஆகும் என்னும் கருத்தை நார்லிக்கர் விளக்கினர். ஒரு ரப்பரை இழுத்து விட்டால் அது மீண்டும் தன் முதல் நிலை மீட்கும் சக்திகேற்ப வேலை செய்கிறது. ரப்பரை அதிக தூரம் இழுத்தால் இச் சக்தி அதிகமாகிறது. இழுத்திருக்கும் முனைகளைக் கொஞ்சத்தூரம் விட்டால்

இச்சக்தி குறைகிறது. ஈர்ப்புச்சக்தி இதற்கு நேர்மாருனது. அது அண்மையில் அதிகமாகவும் தூரத்தில் குறைவாகவும் உள்ளது. இச்சக்தி மிகவும்குறைந்த வலு உள்ள தாகையால் அதிகப்பொருள் திணிவுள்ள வானியல் பொருட்களைக் கொண்டே நாம் இவ் ஆராய்ச்சியை நடத்தவேண்டியிருக்கிறது. ஆனல் எந்த இரு துணுக்குகளை எடுத்துக் கொண்டாலும் அவற்றிற்கிடையே ஈர்ப்புச்சக்தி உண்டு.

குவாசர்கள் (quasars) என்னும் மிகப் பிரகாசமுள்ள நட்சத்திரம் போன்ற வஸ்துக்கள் கண்டுபிடிக்கப் பட்டதையும் நார்லிக்கர் குறிப்பிட்டார். இவை 'ஷ்வார்ஸ்சைல்ட் ஆரம்'(Schwarzchid) radius) எனும் சிறிய ஆரநிலையைக் கடந்து நுண் சிறு பிண்டமாகி ஈர்ப்பு வீழ்ச்சிக்குட் (gravitational collapse) படாமல் இருப்பதை விளக்குவதற்கும் புதியதோர் விதி தேவைப்படுகிறதென்று விளக்கினர்.

நியூட்டன் கொள்கைப்படி ஈர்ப்பு பொருளின் தன்மையாகும். ஒவ்வொரு பொருளும் பிற பொருள் அனைத்தையும் ஈர்க்கிறது. இவ் ஈர்ப்பு பொருட்களின் திணிவின் பெருக்குதொகைக்கு நேராகவும், தூரத்தின் ஈரடுக்கு எதிராகவும் மாறுகிறது. ஐன்ஸ்டைனின் கொள்கைப்படி ஈர்ப்பு கால-வெளியின் (space-time) தன்மையாகும். ஹாய்ல்-நார்லிக்கரின் புதிய கொள்கைப்படி ஈர்ப்பு அண்டத்தின் தன்மையாகும். ஒரு துணுக்கின் பொருள் திணிவும், அது கால-வெளியில் ஏற்படுத்தும் மாறுதலும் அண்டத்திலுள்ள பிற துணுக்குகளின் விளைவாகும். பொருள் திணிவு மாருதிருக்கும்போது இக்கொள்கை ஐன்ஸ்டைன் கொள்கையுடன் ஒன்றுகிறது. ஐன்ஸ்டைன் கொள்கை விளக்காத சில புதிய பௌதிக உண்மைகளை இது விளக்குகிறது. விரியும் ஆனல் வரம்புள்ள (finite and evolving) அண்டத்தைப் பற்றிய ஐன்ஸ்டைனின் கொள்கையை ஓரளவு தாண்டி, படைப்புக்களம் (C-field) என்னும் கருத்தை ஹாய்லும், நார்லிக்கரும் நமக்கு அளித்துள்ளனர். ஈர்ப்பு ஓர் எதிர்மறைச் சக்தித் தேக்கம் என்னும் கருத்து பழைய கொள்கைகளில் உள்ள பல முரண்பாடுகளை அகற்றுகிறது.

—இளம் விஞ்ஞானி

எகோ (ECHO)

(EDUCATION ECHO) 1965 மே வெளியீடு

ஆசிரியரின் நிலை பற்றி அமெரிக்காவில் தீர்மானிக்கப்பட்ட மாநாடு.

WCOTP (விக்டாப்) அமெரிக்காவில் உத்தியோகத்துறையில் ஆசிரியரின் போதனை முறை–தகுதி பற்றி ஆலோசிக்க ஒரு மகாநாட்டை Sao paulo, பிரேசில்



என்னுமிடங்களிலுள்ள Confederacao dos பேராசிரியர்கள், பிரைமரீஸ்டு பிரேஸில் Centrodo professorado paulista ஆகிய இரண்டின் கூட்டுறவுடனும் டிசம்பர் மாதம் 6-11 தேதி வரை 1964-ம் ஆண்டு பிரசுரித்த அறிக்கையைப் பின்பற்றி நடத்தும்.

இம்மகாநாட்டு நிகழ்ச்சி ஆசிரியருடைய அந்தஸ்தின் பொருளும், முக்கியத்துவமும்பற்றி மிக விரிவாகப் பரந்த நோக்கத்துடன் கவனிக்கும் வண்ணம் ஆரம்பமாகும். பிறகு உத்தியோகத்துறையிலும், பொருளாதாரத்துறையிலும், சமூகத் துறையிலும் தனித்தனியான விவாதங்களை நடத்தும். இம்மகாநாடு இரண்டு முக்கிய நோக்கத்தைக் கைக்கொள்ளும். அவையாவன. (1) ஆசிரியருடைய அந்தஸ்தை உயர்த்துவது. (2) தேசீய ஆசிரியர் ஸ்தாபனமும், உலக ஆசிரியர் ஸ்தாபனங்களும் எடுக்கக்கூடியதும் மற்றும் அமெரிக்க மக்கள் அனைவருடைய நன்மையைக் கருதி ஆசிரியருடைய தகுதியின் முக்கியத்துவத்தையும் குறித்து ஆராய்ந்து அறிக்கையை வெளியிடுவதாகும்.

(UNESCO) யூனெஸ்கோ கமிட்டி கல்வி நிகழ்ச்சிகளை விவாதித்தல்.

கல்வி நிகழ்ச்சிகளின் திட்டமும் செயலாற்றலும்; நாற்பது அரசாங்கத்தினர் அல்லாத பிரதி ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் யூனெஸ்கோ A, B. பிரிவு

களுடன் கலந்து பிப்ரவரி 16 முதல் 19 தேதி வரையில் பாரீஸில் யூனேஸ்கோ பொதுக்கூட்டம் N G O, Unesco கூட்டுறவை பாதிக்கும் பிரச்சனைகளின் விஷயமாக எடுத்துள்ள தீர்மானங்களைப் பரிசீலனை செய்யக் கூடினார்கள். அச்சமயத்தில் விவாதிக்கப்பட்ட பல முக்கிய விஷயங்களில் கல்வித் துறையில் திட்டமிடலும் அதன் செயலாற்றலும் ஒன்றாகும்.

இந்தக் கூட்டம் 9 வது NGO மாநாட்டினாலும், சென்ற ஜூனில் ஸ்தாபிக்கப் பெற்ற மூன்று செயற்குழுவினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியின் இரண்டாவது கூட்டமாகும். விக்டாப் பாரீஸ் ஆபூஸின் டைரக்டரான Wilhelm Ebert ன் திட்டப்படி N G O வினால் கல்வித்துறைக்கு எந்த அளவு பங்கு அளிக்க முன் வரும் என்பதை ஒருநாள் முழுவதும் விவாதம் நடந்தேறியது. மேற்படி டைரக்டர் கல்விச் செயற்குழுவிற்கு ஏகமனதாகத் தலைவராக நியமிக்கப்பட்டவர்.

Elbert கூட்டத்தைத் துவக்குகையில் பேசியதாவது. கல்வித்துறையில் பிற்போக்கை ஒழிக்க ஒரே சமயத்தில் இரண்டு வழி வகுத்தலைக் கையாளவேண்டும். முதலாவதாக எல்லா இடங்களிலும் கட்டாய அடிப்படைக் கல்வியை ஸ்தாபித்தல், மற்றொன்று முதியோர் கல்வித் திட்டத்தைத் தீவிரமாகச் செயலாற்றல் முக்கியமாகக் கல்வி புகட்டல். இந்த நீண்டகால நோக்கத்தில் சர்க்காருடைய சிரத்தையும் N G O வின் பங்கும் ஏறக்குறைய ஒன்றேயாகும். யுனேஸ்கோவும் எல்லோரிடமிருந்தும் பரிபூரணமானதும், நிரந்தரமானதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்கலாம்.

யூனேஸ்கோ டைரக்டர் ஜெனரல் Rene Maheu பிப்ரவரி 18-ம் தேதி உத்தியோக முறையில் N G O கமிட்டியின் அங்கத்தினர்களை வரவேற்றபோது நிரந்தர ஒத்துழைப்பின் அவசியத்தை வற்புறுத்திக் கூறினர். WOCTP ஸ்தாப...ம் 1960 லிருந்து இதே அங்கத்தினர் கீழ் பணியாற்றி வருகிறது.

முதன் முதலாக கவனிக்க வேண்டிய விஷயங்கள் யாவை என்று பரிசீலித்ததில் செயற்குழு, வரும் சில மாதங்களில் கீழ்க்கண்ட பிரச்சனைகளைக் கவனிக்கத் தீர்மானித்துள்ளது.

(1) தேசீய சர்வதேச அளவில் எல்லா N G O அங்கத்தினர்களை ஒன்று திரட்டல்.

(2) கற்றுக்கொடுத்தல், படிக்கும் பொருள்கள் இவைகளைத் தயார் படுத்தவும், அமுலாக்குவதும்.

(3) ஆசிரியரின் பயிற்சியும். அடிப்படை ஆசிரியர் பயிற்சியும்.

மேலே தொகுத்துள்ள விஷயங்கள் ஜூன் மாத செயற்குழுவின் கூட்டத்தில் N G O க்களால் அளிக்கப்பெற்ற நடைமுறை விஷயங்களையும், அனுபவங்களையும் ஒட்டி விரிவாகப் பரிசீலிக்கப்படும்.

"மனித சுதந்திர வளர்ச்சியும்," விஞ்ஞானமும் கைத்தொழிலும் வளர்ச்சியுற்ற உலக அமைப்பில் வாழ்க்கையையும், தொழிலையும் மேம்படுத்தது தலைப்பற்றி பொறுப்பேற்றுள்ள N G O செயற்குழுவினற்கு ஆசிரியர்களும் அவர்களின் சங்கங்களும் முழு ஒத்துழைப்பை அளிக்கும்

FISE கூட்டத்தில் விக்டாப் (WOCTP) பின் பிரதிநிதித்துவம்

அல்ஜீரியாவில் ஏப்ரல் மாதம் 1[illegible]—16 தேதி வரை நடந்த அகில உலக ஆசிரியர் பெடரேஷன் சங்கமாநாட்டில் விக்டாப் தன் பிரதிநிதிகளை அனுப்பியது. இதில் பாரீஸ் அலுவலகத்தின் நிர்வாகஸ்தரான "வில்ஹெல்ம் எட்பர்டு" என்பவரும் ஆப்பிக்க அலுவலகத்தின் நிர்வாகஸ்தரான ஙபெஸ்ட் காலரி என்பவரும் பிரதிநிதிகளாகப் பங்கெடுத்துக் கொண்டனர். மகாநாட்டில் நடைபெறும் நடைமுறை அறிக்கைகளைப் பார்வையிடவும், அறிக்கை அனுப்பவும் விக்டாப்பினரால் பார்வையாளர்கள் அனுப்பப்பட்டனர். கூட்ட நிகழ்ச்சியின் அறிக்கை ஒன்று விக்டாப் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படும்.

(Americas) அமெரிக்கா:

Dr. Herbert Abraham டாக்டர் ஹெர்பர்ட் அப்ரகாம், U. S. A. மினஸ்டா (Minnesote) விலுள்ள மூர்ஹுட் ராஜதானியில் கல்வித்துறையில் புரொபஸராகப்

[illegible]ணியாற்றுபவர்) விக்டாப்பில் நடத்திய வகுப்புக்களின் கண்ணோட்டத்தோடு அதை முறையாக ஆப்ரிக்காவிலும் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள ஆசிரியரின் நிலையுடன் ஒப்பிட்டு [illegible]யோகித்தார்.

யூனிவர்ஸிட்டியிலும், கல்லூரியிலும் விக்டாப்பின் அறிக்கை படிப்பதற்கு முதன் முதலாகத் தேவைப்பட்டது. விக்டாப்பின் பெரும்பான்மையான அளவிற்கு ஏற்பட்ட முதல் நிகழ்ச்சியாகும் என்று நம்பப்படுகின்றது.

டாக்டர் ஆப்ரகாம் முன்னாள் யுனேஸ்கோ செகரிடேரியட அங்கத்தினராக இருந்தவர். விக்டாப்பின் விசேஷ மாநாடு பலவற்றிர்க்கும், பொதுச் சபைகளுக்கும் யூனேஸ்கோ சார்பில் பிரதிநிதியாக வந்தார்.

பனமாவிலுள்ள விக்டாப் சங்கத்தின் ஒரு ஸ்தாபனமான மெஜஸ்டீரியோ பனமனே, யூனிடோ சங்கம், மார்ச்சு மாதத்தில் சமீபத்தில் ஆசிரியர் கல்லூரியில் பட்டதாரிகளானவர்க்கு ஒரு செமினர் கூட்டத்தை நடத்தியது.

செமினர் விவாதங்கள் கீழ்கண்டவாறு நடத்தப்பட்டன. அவை:-

(1) சமூகத்தில் பனமினியனின் (panamanian teacher) ஆசிரியர் சங்கத்தின் தொகுதி.

(2) கல்வி சம்பந்தப்பட்ட பொதுவிதிகளும், சட்ட திட்டங்களும்.

3) வகுப்பாசிரியரின் அனுபவங்கள்,

4) ஆசிரியர் சங்க ஸ்தாபனங்கள்.

5) பரஸ்பர மனித குல ஒற்றுமை.

6) கலாசார முன்னேற்றங்கள்.

7) கிராமப்பள்ளியில் கண்ட அனுபவங்கள்.

8) பனமாவிலுள்ள முன்னேற்றத்திற்கான வேலைகளோடு ஆசிரியர் கொண்ட தொடர்பு. என்பவைகளாம்.

கல்வி மந்திரியும், மற்ற இலாகாவின் மந்திரிகளும் பால்டிரீ ஆசிரியர் கல்லூரி அங்கத்தினர்களும் செமினருக்கு அழைக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள். ஐக்கிய மாகாணத்தில் அல்பாமா ராஜதானியிலுள்ள நீக்ரோ கல்வியதிகாரிகள் தேசீய கல்வி சங்கத்தாரை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக மேலும் அதிக சதவிகிதம் ஆசிரியரைத் தந்து உதவ வேண்டுமாறு கேட்டுக் கொண்டனர். ஏப்ரல் மாதத்தில் Echo வில் வெளியிட்ட அறிக்கையின்படி NEA உதவியை united states ல் உளள அல்பாமா மாகாணத்தில் நீக்ரோ கல்வி அதிகாரிகள் தேசீய கல்விச் சங்கத்தாரை அம்மாகாணத்தில் பெருமிதமான ஆசிரியர்களை பதிவு செய்விக்க முயற்சி யெடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். வாக்குப் பதிவு சம்பந்தமாக விளையும் இடையூறுகளையும் தவிர்க்கத் தக்க உதவிகளைத் தனது பல கிளைகளுக்கு அளித்தார்கள்.

வாக்குப்பதிவில் முன்னேற்றமடைந்திருந்தும் மாகாணத்தின் சில பாகங்களில் பிரஜைகளுக்கு இன்னும் வாக்குரிமை அளிக்கப்படவில்லையென்று NEA

பிரதிநிதிகளும், ஆசிரியர்களும் ஒன்றமைந்த பிரிவில் அறிவிக்கப்பட்டது. மேற்படி பிரதிநிதிகள் NEA யைக் கீழ்க்கண்டவாறு கேட்டுக் கொண்டனர்.

(1) ஆசிரியர்களது வாக்கெடுப்பு விதிகளுக்கென்று ஓட்டுச்சாவடிகளை ஏற்படுத்துமாறு உள்துறை ஸ்தாபனங்களுக்கு ஊக்கமளித்தல்.

(2) ஆசிரியர்கள் ஓட்டுப்பதிவு செய்தலும், மற்றும் அரசாங்க விஷயங்களில் பங்குகொள்ளுதல், உரிமையை விளக்கத் தக்க எழுத்து மூலமான நடைமுறைக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு உள்துறைச் சூபரன்டெண்டுகளை வற்புறுத்துதல்.

(3) படிப்பின்மையை ஒழிக்க முதியோர் கல்வித் திட்டத்தை உற்சாகப் படுத்துதல்.

(4) பூரண குடிமைப் பொறுப்புக்கும், உரிமைப் பற்றுக்கும் காரணமாக அமையும்படி, குறைபாடுகளை நீக்கவும் தடுக்கவும் முயற்சித்தல் முதலியவைகளாம். ஸாபாலோ பிரேஸ் என்னுமிடத்திலுள்ள அரசாங்க சங்கத்தைச் சார்ந்த சென்டிரோடு பாபஸர் டோபாலூஸ்டி எல்லோருக்கும் சமமான கல்வி வாய்ப்பைத் தரவேண்டும் என்னும் நோக்கத்தோடு தொடர்ந்து ஒரு பிரசாரத்தை நடத்தியது. 1965-ம் வருடத்திய WCCTOP ப்பின் கொள்கையும் இதுவே யாகும்.

CPP யின் தலைவராகவும், புரொபசராகவும் காங்கிரஸ்காரராகவுமிருந்த ஸாலன் பார்க்கஸ்டூரீஸ் என்பவரால் மேலே கண்ட இந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கல்வித் துறையில் பல்வேறு வகைகளை நடைமுறையில் தன் கவனிப்பைச் செலுத்திவர ஆசிரியர்களால் இந்த கேம்பின் மூலம் ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பித்தது.

இதுகாறும் பொதுஜன பாதுகாப்புப் பள்ளிகளுக்காக நிறுவப்பட்ட கமிட்டியில் அங்கத்தினராகப் பணியாற்றிய திரு பரேபசர் பார்க்ஸ்டூரீஸ் இந்த கேம்பியனின் தலைவராக இருந்து நடத்திக்கொடுத்தார்,

தேசீய செமினர் ஒன்றை ஈக்வேடாரிலுள்ள கோயாகுல் என்னுமிடத்தில் மே மாதம் 3 ம் தேதியிலிருந்து 6 தேதி வரை ஆசிரியரின் ஸ்தாபனங்களின் நோக்கத்தைக் குறித்து ஆசிரியர்களின் தலைவர்களுக்கான சங்கத்தில் நடத்தியது. ஈக்வேடாரிலுள்ள UNE யும் WOCTP ப்பும் சேர்ந்தது செமினரைத் துவக்கி ஸ்தாபித்தன.

விக்டாப் லத்தீன் அமெரிக்க நிகழ்ச்சியின் ஒரு பகுதியான செமினருக்கு அழைக்கப்பட்டவர்கள் ஈக்வேடாரிலுள்ள 42 உள்துறைச் சங்கத்தின் தலைவர்களும் காரியதரிசிகளும், U N E யின் அங்கத்தினராக உள்ள சங்கங்கள். UNE தேசீய ஆபீசர்களுமாவர். UNE காங்கிரஸைப் பின்பற்றி இச் செமினர் நடத்தப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள விக்டாப்பின் ஸெமினர் எல்லாவற்றிற்கும் நிர்வாகஸ்தராக இருக்கும் ஜோஸ்ஜோயகுன்ரிவாரா இச்செமினருக்கு வழிகாட்டியாக நடத்திக் கொடுத்தார்.

(Asia) ஆசியா

(Korean govenment plan)

கொரியன் கல்வி பெடரேஷன் சங்கம், சமீபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் கொரிய அரசாங்கம் திட்டமிட்டபடி கல்விப் படிப்புக்கான காலநிலையை 16 ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளாக குறைக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. மேலேயுள்ளபடம் youyrdu choe தேசிய அசெம்பிளி கல்வித் துறைச் செய்தி அறிவிக்கும் கமிட்டியின் தலைவர் பேசுவதைக் குறிக்கிறது.

கல்வி மந்திரி காரியாலயம் நடைமுறையிலிருக்கும் கல்வியாண்டு முறையை 6—3—3—4 என்றிருப்பதை 6-5-4 என்ற முறைக்கு 1966 ம் பள்ளி ஆண்டில் மாற்ற எண்ணங்கொண்டுள்ளது. இதைப் பற்றிய முதலாவது தீர்மானமும் அறிக்கையும் கொரியாவின் தலைவரான சூங் ஹி பார்க் என்பவரால் அவருடைய மாகாணத்தில் தேசியச் செய்தியில் ஜனவரி மாதத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு எதிராக KFEA பின் கண்டவாறு கூறியது. 16 ஆண்டு கல்வி முறைதான் உலகம் பூராவிலும் பின்பற்றப்படும் பொதுவான பழக்க முறை இம்முறையைக் குறைப்பது, கொரியாவின் கல்விமுறைதான் உலகம் பூராவிலும் பின்பற்றப்படும் பொதுவான பழக்க முறை. இமமுறையைக் குறைப்பது, கொரியாவின் கல்வி நிலையின் அளவை இறுதியில் பாதிக்கும் முடிவாக அமைந்து விடும். அதாவது தரம் குறையும் என்று கூறியது.

ஐரோப்பா (Europe)

விக்டாப்பின் எல்லாத் தலைமை ஸ்தாபனங்களுக்கும் அதன் காரியதரிசியான (Srecatary generl) வில்லியம்கோ என்பவர் ஒரு அறிக்கையில் பின்கண்ட

வாறு அறிவித்திருந்தார். அதாவது அடீஸ் சுபாபாவின் விக்டாப் டெலிகேட் சட்ட சபையில் விக்டாப் ஐரோப்பாவின் கலாசார கவுன்சிலுடன் தொடர்புகொண்டு அதைச் சமர்ப்பிக்கும் என்பதாகும்.

விக்டாப்பின் அறிக்கையின்படி கூறுவதாவது :

இதுபற்பல ஆசிரியர் சங்க ஸ்தாபனங்களை துவக்கத்திலிருந்தே ஒன்று சேர்த்திருக்கிறது. C C C யில் அது பணியாற்றியபொழுது நடைபெற்றதாகும் என்பதும் ஒன்று. இந்த ஸ்தாபனமானது முக்கியமான சில நிப்பந்தனைகளை CCC யிலுள்ள ஆசிரியர்களில் போதனுமுறைத் தொழிலில் பூர்த்தி செய்கிறது. அதற்கான ஆர்வத்தை விக்டாப் அரசாங்க ஸ்தாபனமாக இல்லாமல் ராஜாங்கத் துறையிலும், மதத்துறையிலும் சாராமல் ஸ்தாபனத்தைப் பாதுகாத்து வருகிறது. கலாசார கவுன்சிலின் கூட்டுறவானது பள்ளிக்கூடக்கல்வி, ஆரம்பக்கல்வி, செகண்டிரிக் கல்வி, ஆசிரியக் கல்வி தொழில்முறைக் கல்வி முதலியவைகளோடு தன்கமிட்டியின் மூலம் சம்பந்தப்பட்டு பொருந்தி வேலை செய்கிறது. டாக்டர் கார் தம் அறிக்கையில் விக்டாப் CCC யுடன் தொடர்பை இரண்டு முக்கியமான வழிகளில் கடைப் பிடிக்கலாம் என்று விளக்குகிருர். முதல் முக்கிய ஒப்பந்தமாவது CCC விக்டாப்பின் ஸ்தாபன நோக்கத்தை அறிந்து கொள்வது. ஆசிரியத் தொழில் முறை சம்பத்தப்பட்டவரை விக்டாப் ஒரு கால்வாயாக இருந்து CCC க்கும் தேசீய ஆசிரியர் சங்கத்திற்கும் அந்த நாட்டைப் பொறுத்தவரை செய்திகள் அனுப்புவது.

இரண்டாவது தீர்மானம் C C C யுடன் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்படி அறிதலும் அதற்கேற்ப ஒப்புக்கொள்ளுதலுமாகும். (a) அதாவது ஐரோப்பா, விக்டாப் போடு சம்நந்தப்பட்ட ராஜதானிகளிடையே நெருங்கிய தொடர்பை உண்டுபண்ணுகிறது. உலக முழுவதும் சம்பந்தப்பட்ட ஆசிரிய சங்கங்களுடன் எந்த விதத்திலும் மாறுபாடு கொள்ளாது. (b) இதனுடைய மேலெழுந்தவாரியான செயல்கள் கல்வியைப் பொருந்தியிருக்கிறது. விவாதங்கள், அரசாங்கத் துறைக் கருத்து வேறுபாடுகள், மதசம்பந்தமான வேறுபாடுகள் இவை இதன் செயலுக்கு அப்பாற்பட்டதாகும்.

விக்டாப் உருவாவதற்குப் பல வகையான கருத்துக்கள் அது தொடர்ந்து செயலாற்றுவதற்குக் கொண்டுவரப்பட்டது என்று டாக்டர் காரின் அறிக்கை கூறுகிறது. C C C யுடன் தொடர்பு கொண்ட கமிட்டி விக்டாப்பைப் போன்ற ஆசியா கமிட்டி அல்லது ஐரோப்பிய அரசாங்கத்தினர்களைக் கொண்ட ஸ்தாபனத்தின் கமிட்டிகளின் கருத்துக்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இவை போன்ற கமிட்டி பிரைமரி செகண்டரி, தொழிற் கல்வி, பெரியதும் சிறியதுமான நாடுகள் போன்றவைகளுக்குப் பிரதிநிதியாக இருக்கவேண்டுமென்று மேலும் வற்புறுத்தினர்.

எந்த சந்தர்ப்பத்திலும் செகரட்டிரி ஜெனரல் liaison officer வரை c c c செகரடேரியட்டுடன் ஒழுங்காகத் தொடர்புள்ள நியமிப்பார். கமிட்டிக்குத் துணை செய்ய விக்டாப் பாரீஸ் அலுவலகத்தில் அவர்களுக்கான பதவியை ஆக்கித் தர வேண்டும்.

அறிக்கையானது மேலும் தொடர்ந்து தனது சகோதர சங்கத்தின் ஸ்தாபனங்களுக்கு எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் சிறந்த முறைகளுக்கான கருத்துக்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் வேண்டுகோளை விடுத்து liaison நடவடிக்கைகளை முறைப்படுத்தி முடிக்கிறது :

International



உலக தேசீய சுகாதார கவுன்சில் உடல் பயிற்சிக் கல்வி, பொழுது போக்கு நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த விக்டாப் அங்கத்தினர் ஒருவர் பாரீஸில் 1964 ஆகஸ்டு மாதம் 7-10 தேதி வரை பாரீஸில் நடந்த 7-வது உலக தேசீய மாநாட்டில் அதனுடைய நடவடிக்கைகளைப் பிரசுரித்தார்.

மேலே காட்டியுள்ள படம் Dorothy S. Ainsworth ம், (கவுன்சிலின் அன்பளிப்பும் தேசீய கருத்தொற்றுமையும் "சுகாதாரக் கல்வி உலக முழுவதும்" என்ற தலைப்புக்களில் விக்டாப் தலைவர் சர். ரொனல்ட் குட்டும் பேசியபோது அமைந்தது. விக்டாப் Ichper நடத்திய செமினாரில் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தியில் பின் குறிக்கப்பட்டவை அடங்கியுள்ளன.

(1) WCOTP-ICHPER குழுவில் சுகாதாரக் கல்விபற்றி சமர்ப்பிக்கப்பட்டது.

(2) விடுதிக்கும், ஆராய்ச்சிக்கும் ஓய்வு நேரத்திற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டது.

(3) ICHPERக்கு உடல் நலக் கல்விபற்றியும் விளையாட்டுப் பயிற்சி பற்றியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான பயிற்சிபற்றியும் அவர்களின் தகுதி பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டது.

U. S. கான்சியிலுள்ள S2விடமிருந்தாவது அல்லது அதற்குச் சமமான இடத்திலிருந்தாவது எழுத்து மூலமாகப் பிரதிகளைப் பெறலாம்.

ICHPER 1201 16th தெரு, N. N. வாஷிங்டன் D.C. 2006 U.S.A. என்று எழுதவேண்டும்.

ஆப்பிரிக்கா (Africa)

Dar-es-Salaam என்னுமிடத்தில் நடந்த தேசீய சங்க தொழிலாளர் முதல் வருடாந்திரக் கூட்டத்தில் கலந்துகொண்ட திரு. E. Bennett Caulley அமர்ந்துள்ளார்.

கனடியன் பெடரேஷன் (Canadian Teacher's Federation) யூனேஸ்கோவிற்கு உதவி செய்வதற்காக S2, 200 பவுனை அனுப்பியது. மாகாண ஆசிரியர் சங்கத்தினரால் நன்கொடைத் தொகை CTFஐ உண்டாக்குவதற்காக அனுப்பப்பட்டது. இது UNESCOவில் வேலைபார்ப்பவர்களுக்குத் தாற்காலிகமாகச் சம்பளம் கொடுப்பதற்காகவும், மிமியோகிராப் காகிதம் வாங்குவதற்காகவும், மற்றும் போதிய வசதிக்காகவும் சம்பளம் வசூல் செய்யவும் அங்கத்தினர்களை அதிகரிக்கவும் செலவிடப்படும்.

1962-63ல் சுமாராக 2500லிருந்து 3000 காங்கோலீஸ் ஆசிரியர்கள் தமது அறிக்கையில் ஒருவரும் சம்பளம் வாங்கவில்லையென்று அறிவித்துள்ளனர். அவர்கள் பெறவேண்டிய உதவித்தொகை அரசாங்கத்திடமிருந்து அடிக்கடி வருவது தடுக்கப்பட்டது. இந்த உதவித்தொகைப் பணமானது அரசாங்கத்தின் வேறு பல துறைகளுக்குச் செலவிடப் பட்டதாகக் கூறப்படுகிறது.

உத்தியோகத் துறையின் உயர்ந்த உணர்வு காங்கோ ஆசிரியர்களிடையே அதிகம் இருந்தது. UNESCOவின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் கையொப்பத்தின்பேரில் கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் அப்போதைக்கப்போது அங்கத்தினருக்கான தொகையைக் குறைத்துக்கொள்ள ஒப்புக்கொள்கின்றனர்.

ஸ்விட்ஜர்லாந்து, இஸ்ரேல், ஜெர்மன் இன்னும் இதரநாடுகளின் ஆசிரியர்கள் பல்வேறு விதமான உதவி நிதித்தொகைகளை காங்கோவின் உத்தியோகத் துறைக் கூட்டுறவுக்குத் தர உறுதிமொழி கூறினர். பாரீஸில் சென்ற ஆண்டில் நடந்த விக்டாப் டெலிகேட் அசெம்பிளியில் C.T.F.ம் சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டு காங்கோவின் தேவையை முதன் முதலாக அறிந்தது.

The syndicat national (சிண்டிகேட் நேஷனல்)

SNEPCI, ஆப்பிரிக்காவின் முதன் முதலாக பிரஞ்சு பேசுகின்ற ஆசிரியர் சங்க ஸ்தாபனமாகும். சமீபத்தில் வெளியிட்டுள்ள பட்ஜெட்டின்படி இது Automobile ஆட்டோமேபைல்) ஒன்றை வாங்கியுள்ளது. படத்தில் இதற்குப் பக்கத்தில் நிற்பவர் niamkey Adiko, SNEPCI வின் செகரட்ரீ ஜெனரலாவார்.

6200ல் 4853 அங்கத்தினர்களை ஐவரி கோஸ்டில் சிண்டிகேட், பொது ஜன ஆசிரிய அங்கத்தினர்களாகப் பெற்றுள்ளது. 18 வது காங்கிரஸ் ஜூலையில் நடந்த மகாநாட்டில் சிண்டிகேட் ஒரு அறிக்கை தயார் செய்து நிதி மந்திரி சபைக்கு ஆசிரியர் சம்பளங்களிலிருந்து வசூல் செய்ய அனுப்பியது. இவைகள் இந்த ஆண்டு மிக திருப்தியாக நடத்தப்பட்டன.